36

15

வர்ம வைத்தியம்

([illegible]) [illegible]

பாட்டு
(18) பக்கங்கள்
பாடம்
(8) பக்கங்கள்

வர்ம வைத்தியம்.

பன்னிரண்டு ஈட்டின் விபரம்.

சீரான திலதமென்ற கால மெங்கே
  சிறப்புடனே நட்சத்திரக் கால மெங்கே
பேரான செவிகுத்தி கால மெங்கே
  பிடரியென்ற காலமெங்கே பேணிச் சொல்வீர்
கூறான நித்திரையின் கால மெங்கே
  கூர்மையுடன் திவளையென்ற கால மெங்கே
வாரான நேர்காலம் அடப்ப காலம்
  வகையுடன் அத்திசுருக்கி வர்ம மெங்கே
ஊரான உறுமியென்ற கால மெங்கே
  உத்தமனே மூத்திரத்தின் கால மெங்கே.

காரான கல்லணையும் கால மெங்கே
  கடந்துவிட்டால் எழுபிறப்பும் கருத்தானங்கே
தொட்டபடி தொடுவர்மம் தொண்ணூ த் தாறும்
  சொற்பரிய முன்சொன்ன பன்னி ரண்டும்
வீடறியா மானிடரே தேகந்தன்னை
  விபரித்த விந்தைநிலை விபரமாகக் கூற
அறிந்து/இது-விபரம் கூறு வோர்க்கு
  குருவினவும் இந்நாளுங் கூறு வோமே.

பிரிவு-9: பக்கவிசை கொக்கி நரம்பு-1 உரிசர் நாடி நரம்பு-3 ஆக இரு புறமும் சரிகாறைக்கு மேல் சங்கு புட்டுக்கு கீழ் வலது புறம் கழுத்தடி நரம்பு-2. உள்நரம்பு-2. ஆட்டநரம்பு-2. ஆக ஆறு, புறநரம்பு-64 ஆக-210. அதின்மேல் காதின் சிரசின் கீழ் காதுக்கு புட்டு நரம்பு 12. சிரசில் விசை நரம்பு-3. ஆக 15. இருபுறமும் சரி பிறமே பி(பு)டரியில் ஆட்ட நரம்பு-1. அதின் மடிவு 2ல் உப்பு...... திக்கும் வலத்தே வாற நரம்பு, அரையிளந்த தலத்துக்கும் ஆண் உடம்புக்கும் அருகே மேலேந்தி இடது புறத்துக்கு வாற நரம்பு இளைந்த தலத்துக்கும் நரம்பு 2-ல் மடிப்பு,பிரிவு உள்நரம்பு சதநரம்பு நீக்கி மேலே-68 இடது கைக்கு நரம்பு-68. இடத்தே நரம்பு-90 வலத்தே நரம்பு-91. வலத்தே முனுக்குக் கீழ் நரம்பு-106 இடதுகாலுக்கு நரம்பு-105. உள் சூத்திரம் கண்டறியவும். உள்சாரம் பதினொன்றுக்கும் நூல்-36. தட்டு-6. விபரம்-4.

தட்டுநீக்கி பஞ்சபூதம் ஐந்துக்கும் பூலோகத்தின் மேல் நெஞ்சாங் கொழுந்து கீள்-1 நெஞ்சாங்கொளுந்துக்கு மேல் புட்டெலும்பு-3க்குக் கீழ்-1 அதின்மேல் எலும்பு-3. 3க்குக்கீழ்-1 அதின்மேல் பதப்பான கீழ-1. ஆக பஞ்ச பூதம் ஐந்துக்கும் தட்டு-5. ஆக தட்டு ஐந்துக்கு மேல் அடக்கம் நூல் பலத்தே

..2

கால் எலும்பு நடுக்காளம் 35 நேரே மூலமரையும் உள் நரம்பு இணையாக இருபுறமும் சரி இரண்டாவது கால். குருநாடி முதல் மேல் அரைக்குக் கீழ் புட்டுவிசை-3.: இருபுறமுஞ்சரி. ஸ்ரீ மூலத்துக்கு மேல் தொண்டை பதைப்பான கீழ புட்டு விசை-3 இருபுறமுஞ்சரி காறைக்கு மேல் புட்டு-3 அதில் கீழ் வலது கைக்கு புட்டு-3. ஆக -5 அடக்க சிரசே பிரமாணம். இதில் வாத-வர்மம்-96. பித்த வர்மம்-24. சிலேற்பனம் -6. மாட்டுக்கும், கோழிக்-கும் வர்மம்-3. இது கண்டறியவும், இது கண்டறியுவும். உள்ளடக்க வர்மம் சரி மரணக்குறி பார்த்து ஆராய்ந்து செய்யவும்.

அடக்கமூல பரீட்சை

நாலடி வர்ம கண்டி நன்றாக அடக்க மூல பரிச்சை

கேளப்பா வர்மத்துக்கு முதலாங் கால(ம்)
    கெடிதான நெற்றிநடு திலதற் காலம்
நாளப்பா ஓர்விரல்கீழ் தரங்க காலம்
    நலமாக வலமிடந்த நட்சத்திர காலம்
வாளப்பா திலத்த-தத்தின் மூவிரல் கீழ்(மே)
    வகையான குருந்துவர்மம் வகையாய்ச் சொல்லோம்
கேளப்பா கடக்கன் மூவிரல் கீழ்(மே)
    கெடிதான செவிகுத்திக் காலந் தானே.

செவிக்குத்திக் காலத்துக்கு சேரவே
    மூவிரல் கீழே
கவிபெறு சங்கு முடிப்பு
    காலந் தானே
ஓர்விரல்கீழ் நலமில்லை உறக்க
    காலம் நாடினேன்
ஈர்விரல் பலத்ததோர்திவளகாலம்
    பேசினோம் பேசினோமே

திவளைநற் காலத் துக்கு சேரவே
    திலமி டந்தான்
நலமாய் ஆறுவிரல் வலத்தை நாடிப்பாரு
    துடிவர் மந்தான்
துடிவர்-மத்தின் மூவிரலுக்குமுன் துடியான
    விலாவர்மம் விரல் ஒன்றுக்கு
விரல் ஒன்றுக்கு முன்கடிதான் இம்முன்றுக்கும்
    காலந்தான் நாளிகைதொன் ஊர மூபாரே.

நன்றான திவிள்ளஓ ரெட்டையின் கீழ குப்புவர்மம்
 நலமான விலாவிலா ஒட்டைக்குள் அடப்பகாலம்
நன்றான கூப்புக்கு இருவிரல் கீழே (ம்)
 நலமான ஈரல்குலை வர்மம் அப்பா
குன்றாத கொலைவர்மத்தின் நாலுவிரல் கீழே
 உச்சிக்காலம் நாளுமே பதினைந்து நாழிகை சரியே

உச்சியான மூவிரல் கீழே(ள்)
 உண்மையாம் மூத்திர காலம்
கட்சியாம் நாலுவிரல் கீழே
 கண்டிடா ஆணுடம்பு வர்மம்
ண்டு நன்று ஆணும் வித்தி
 தன் கல்லெடை காலந்தான்
உச்சிடம் வலத்தே ஊன்றினேன்
 பள்ள வர்மம்
ஒட்டையின் கீழ் மெள்ளவே
 நடைவர் மந்தான்
விளம்பினேன் இருவிரல் கீழ்

 கள்ளமில்லை பள்ளிவர்மம்
கடிதாய் ஒருவிரலின் கீழ்
 மெள்ளவே பகர்ந்து விட்டேன்

சந்துவசை விலாறுளை மூலமதில்
 விளம்பக் கேளாய் நேருக்கு வர்மம் ஒன்றே.

பாரப்யா பள்ள வர்மத் துக்கு
 பாங்கான வலதுடை அசைவுக்குள்ளே
பாரப்பா முட்டெல்வர்மம் பள்ள நடுவில்
 பாங்கான அத்திசுருக்கி இரண்டு பாரே
நாரப்பா நரம்பதுதான் அற்று தானால்
 நலமாக நாழிகை நாற்பத் தொன்றால்
பாரப்பா நரம்பதுதா னிருக்கு மாதில்
 பாரிலே சுகமாவார் மண்டலந் தானே.

கண்டத்திற்கு யருபிம்பி
 காலத்திட விபரம் கேளாய்
பிண்டத்தில் தருச் சு - ழியில்
 பிசகியே காலங் கொண்டால்
கண்டநாள் மூன்றில் ஏழில்

 கடிதென்பின் மூனப்பா
~~விண்டிட~~ நெ

விண்டிட நெஞ்சுங் கூட்டி
விளம்பினேன் மரணம் பாரே.

அடக்கமதி வாதவர்மம் அறிவாய் நீயும்
அப்பனே கண்சிவக்கும் பெருவாய் வுள்ளும்
மடக்கமதி வாய்கோணும் இருமப வுண்டாம்
வளமாக கண்ணீர்பாயும் நாசி யடைக்கும்
திடமாகச் சயமிளகும் நட்சேத்திரங் காணும்
செப்பிலார் கேளாது கண்மேல் சொருகும்
மடமாதே உறங்கினாய் போலமுகஞ் சுழிக்கும்
வகப்பாக இவ்வமும்நீ வருந்திப் பாரே.

பாரேநீ விக்கலுடன் நாக்கு தாகும்
பண்பான வில்போலாம் கண்கள் மூடும்
சேரவே மூச்சொடுங்கும் கைகா லுளையும்
சிறப்பான கண்ணுவும் வெண்பஞ்சு போலாம்
பாரேநீ நீய்யது போல சுருங்குமே
பண்பான உறுமலுண்டாம் தேகஞ் சிலுக்கும்
வாரேநீ ஓர்முளங்குறுக்கும்வெண்ணுரையே கக்கும்
வளமாக நாசியில்நீர் பாயும் காணவே.

காணவே கைகால்கள் தளர்ந்து போகும்
கனமாக மூலங்கடுக்கும் வயற்தா னேத்தும்
தோணவே நெஞ்சொடுங்கும் கண்கள் தள்ளும்
சுருக்காக கைகால்கள் மேல டிக்கும்
கோணவே தேகமெல்லாம் ஆட்டங் கொள்ளும்
கூறுவேன் கழுத்ததுவும் கோணிக் கொள்ளும்
வீணாதே எண்ணாதே யப்பா நீயும்
விசைநாடி கருநாடி பார்த்தே செய்யே.

வாதத்தில் ஆனு டம்பு வலிய
கல்லட காலந்தான
தீதுடன் கொண்டால் செய்யும்
செய்கை கூறக் கேளாய்
போதித்த ஆனு டம்பு புகுந்திடும்
வித்துள் ரெண்டும்
வாதற்று நீமெய் யாய வகையுட
வைசெய் வாயே.

ஆனதோர் வாதத்தில் அண்டமும்
கொண்டால் உண்மையாய்
அண்டப் பேதி வலம்சலம்
தன்னால் போகும்
ஆனதோர் நடைதட்டிக் கொண்டால்
அப்பனேமெ மேதேறிக் கொள்ளும்
உள்ளகம் அறிந்து நீயும்
உடனே கைசெய் வாயே.

செய்யேநீ பித்தத்தில் வாமங் கொண்டால்
சேரவே மயக்கமும் வேர்வை யுண்டாம்
வெய்யவே தலைசுற்றும் ஓடி சாடும்
விரையவே மண்மீதில் படுக்கும் பாராய்
பைய்யவே நித்திரை யில்லை
பாரப்பா நாய்போலே எழுந்து நடக்கும்
செய்யவே தலை சு ழற்றும் நாக்குளறும்
செப்பினேன்டு அசத்தியம் மிச்சம்செப்பி னேனே.

செப்புவேன் சிலேற்ப னந்தான்
சேரவே வாய் நாசியால்
அப்பனே சோரை காணும்
அதிகமாய் திரும்பும் நாவு
ஒப்புடனே மேல் கழுத்து
உடனே முன்பின் னாகும்
தப்பில்லை காலன் வந்தான்
சடுதியில் மரணம் பாரே.

வாதத்தில் வர்மங் கொண்டால்
வன்மமாய் இளக்கச் சொல்வேன்
பாதாதின் உள்ளின் நோயை (நேர்மை)
பகர்ந்திட்டேன் மூன்று நோக்கு
கோதற்ற காரியில் மூன்று நோக்கு
குணமுடன் வெள்ளையில் மூன்று
வாதற்ற புறத் தடவி
வரிசையில் அமர்த்திக்கொள்ளே.

பித்தத்தில் வர்மங் கொண்டால்
பிசகில்லை காரியில் ஒன்றும்

~~மத்தியில் சுழி முனையில்~~

~~பத்த~~

மத்தியில் சுழி முனையில்
பக்கத்தில் ரண்டு சுன்டல்
பத்திரமாய் நெஞ்சில் தட்டி
பச்சவெள்ளம் முகத்தில் சித்தே
உத்த சிலேற்பனமே யானால்
உடல்பட்டுச் செய்யாதே யப்பா.

முற்றிற்று

வாதம், பித்தம், சிலேற்ப வர்ம விபரம்.

வாதவர்மம், பித்தவர்மம், சிலேற்பன வர்மம், முதலாங்காலம் - திலத காலம். (ந)நெற்றி நேர்மையில் திலதகாலம் கொண்டால் அதின் குணம், கண்ணிரண்டும்சிவக்கும், அறிவழிக்கும், நாழிகை 32-க்குள் இளக்கும் மறுபுறம் நெருக்கும் நேர்விரலுக்குமேல் தட்டியிளக்கி காரியில் மத்தி கொள்ளவும் (காலம்-1.)

அதின் கீழ் ஓர்விரல் தூரங்காலம் கொண்டால் நாக்குளழும், வாய் கோணும், சப்தமறியாது ஓர் சாமத்துக்குள் நாசியில் நீர்பாயும், நாழிகை-ஏழுக்குள் பேன்குழிக்குமேல் உச்சத்தில் கீழ் தட்டி யிளக்கி காரியிலும் பரிசையிலும் அமர்த்திக் கொள்ளவும்.

2. கொம்பேறுமூக்கன் தரங்க காலத்தின் கீழ் நாற்பத்தைந்து விரலின் கீழ் கொம்பேறு மூக்கன் காலங் கொண்டால் நாசியில் சோரை காணும் கண் சிவக்கும். இக்குறியில்லாவிட்டால் நாழிகை-3½ இளக்கிக் கொள்ளவும்.

3. வலமிடம் கண்ணருகே "நட்சத்திர காலம்" கொண்டால் கண்ணிரண்டும் தட் தட்டி விழித்திருக்கும். உமைதடுக்கும் இளக்கு முகம் மலர்ந்து மறுபுறம் உச்சத்தில் கீழ்விரலான்றி இளக்கிக் கொள்ளவும். சிரசில் மத்திப்புக் கொள்ளவும்.

4. நட்சேத்திர காலத்தில் மூவிரல் கீழ் செவிகுத்திக் காலம் கொண்டால் சன்னி முடி பல பூண்டு போகும். கண்ணடைத்து தலைசுற்றி விழும். இதற்கு நாழிகை பதின்மூன்று. மறுபுறம் நேர்மை வலமிட மறிந்து கைவிரித்து வைத்து தட்டியிளக்கவும். உச்சியிலும் தட்டியிளக்கிக் கொள்ளவும். சுக்கு கஞ்சியில் போட்டுக்கொடுக்கவும்.

காலம்.5: முன்கொம்பேறி மூக்கன்.

காலம்.6: விரலின் கீழே சங்கு முடிப்பு வர்மம் கொண்டால் முடிப்பத்தால் பிழையாது. முடிப்பவர்க்கு விட்டால் பிறமே நேர்மை பேன் குளிக்கு கீழ் கை விரித்து வைத்து தட்டி யிளக்கவும். உச்சியில் தட்டி யமர்த்திக் கொண்டு கழுத்தி லிருபுறமுந்தடவி யிளக்கவும். நாழிகை 9-க்கு சுக்கிட்டு வெந்நீர் கொடுக்கவும்.

காலம்.6: முடிப்பின் ஓர்விரலின் கீழ் உறக்ககாலங் கொண்டால் செவிகேட்கும் எதிரெடுக்கும் யிருக்க வொட்டாது. கன், தலை இறுக்கும் மறுபுறம் நேர்மை பேன்குழிக்கு கீழ் தட்டி யிளக்கவும் கருத்தி லிடபுறமுந் தடவி தடவி மாற்றிக் கொள்ளவும் நாழிகை 7½.

காலம்.7: உறக்க காலத்தில் இரண்டு விரலருகே திவளைகாலங் கொண்டால் கன் தள்ளும் பல் கழுக்கும். கை, கால் வலித்து நிமிர்ந்து போகும் மறுபுறம் பிடரியில் சுழியில் தட்டி யிளக்கவும். கை, கால் வலித்து உதறி தூக்கி விடவும் சுக்கிட்டு வென்னீர்கொடுக்கவும் நாழிகை. 41.

காலம்.8: கும்பு வர்ம திவளை காலத்துக்குக் கீழ் கூம்பு வர்மம் கொண்டால் கவிழ்ந்து விழும். வாயால் நுரைக்கும் கன் கறுத்துப் போகும் இளக்கு மறுபுறம் நேர்நடு குறுக்கில் கால்மடக்கி குடுமி பிடித்து தட்டி இளக்கி காரியிலும், பரிசையிலும் அமர்த்திக் கொள்ளவும். நாழிகை. 3¼

ஈரல்குலை வர்மம்:- கூம்பு வர்மத்துக்கு 2½ விரலுக்குள் ஈரல் குலை வர்மம் கொண்டால் குணம் ஈரலற்றால் பிழையாது. வயறூதும் தாகமதிக முண்டாகும். பரிதாபங் கொள்ளும். இந்தக்குறியில்லா விட்டால் மறுபுறம் நேர்மை சுழிக்குக் கீழ் காலை மடக்கி தட்டி யிளக்கி, கை, கால் தடவி விட்டு காரியிலும் தட்டி வென்னீர் கொடுத்து வென்னீர் விடவும். நாழிகை. 12.

10 அன்னவர்மம்:- ஈரக்குலை வர்மத்துக்குக் கீழ் ஐந்து விரலில் அடிவயிற்றில் அன்ன வர்மங்கொண்டால் குணம். வயறு அதச்சு சரீரம் பூரிக்கும். கண்ணிமை தடுக்கும். கால் கைகளெல்லாம் குளிர்ந்து மிருக்கும். இளக்கு மறுபுறம் நேர்மை. சீலை கட்டுக்கு மேல் தட்டி வயிறு தடவி இளக்கி காரியிலும், பரிசையிலும் அமர்த்திக் கொள்ளவும். மேலத்தை சுக்கு கஷாயம், திப்பிலி, ஓமம், வாளம் இவை சேர்த்து வறுத்து பொடி செய்து வெல்லமும் கூட்டி இந்தச் சூரணம் கொடுக்கவும். பேதி அதிகங் கண்டால் கால் பாதம் கழுவி உப்பிட்டு கஞ்சி கொடுக்கவும் சுகம். நாழிகை- 60¼.

11. உச்சிக்காலம்:- அன்னவர்மத்துக்கு 2 விரலுக்குக் கீழாக உச்சிக்காலம் கொண்டால் குணம் குறுக்கு தரிக்கும். காலும் கையும் ஆடாது. ஊமையும் பேச்சுமில்லாமல் உருண்டு புரண்டு விழும். இதை சன்னியென்றும் சிங்கித்தான் என்றும், பிசாசுபிடி யென்றும் சிலபேர் சொல்வார்கள். இளக்கு மறுபுறம் வெள்ளையில் தட்டி இளக்கி காரியிலும் பரிசையிலும் தட்டி அமர்த்திக் கொள்ளவும். வென்னீர் விடவும் தீரும்.

12 மூத்திரகாலந் கொண்டால் அடிவயறு தடித்து வீங்கும் மூத்திரம் சொட்டு சொட்டாய் விழும் இளக்கு- மறுபுறம் சீலை கட்டுக்குள் மூலத்தில் கால் மடக்கி மூன்று தட்டு தட்டியிளக்கிக் கொள்ளவும் நாழிகை- 27½

13. குறிஞ்சி_வர்மம்:- மூத்திர காலத்தில் மூவிரல் கீழ் குறிஞ்சி வர்மம் கொண்டால் குணம் மூலங்கடுக்கும்., வயிறளையும். நீர்தரித்து சிறுத்து விழும். இளக்கு மறுபுறம் நேர்மை இருபக்கம் சீவி எலும்பு நடுதானத்தில் கைமடக்கி உதைத்து இருத்தி கால்குத்திக் கொண்டு மூணு தட்டு தட்டவும். மேல் பள்ளையிலிருந்து இரு பக்கமும் இறக்கி தடவி மலாந்து படுக்கச் செய்து காலிரண்டும் மேலே தூக்கி பின் கால் கொண்டு அரை விநாளம் மூன்று தட்டு தட்டி இளக்கிக் கொள்ளவும். மேல் கஞ்சி பாகம்வெள்ளையரிசி நன்றாய் தீட்டி யிளக்க வறுத்து மல்லி சீரகம் வெங்காயம், சிறுகீரை இவை அரைத்து அள்ளம் உண்ணும் போது சாப்பிடவும் பின்னும் மேல் நல்லாரி என்னெய் காய்ச்சி முழுகவும். இளங்கோழி யிடித்து உப்பிடாமல் வறுத்து வெங்காயம் சேர்த்து சாப்பிடவும்.

14. ஆணுடம்பு_வர்மம்:- குறிஞ்சி வர்மத்துக்கு மூவிரல் கீழ் ஆணுடம்பு வர்மம் கொண்டால் குணம், தண்டு உள்வாங்கும் சாம்பறியாது, உள்ளங்கால் வேர்க்கும், தேகம் வெதும்பும், வலிப்பு முண்டாம். இளக்கு- மறுபுறம் சுழியாடியிலிருந்து முடிகொண்டு கீழ் தடவி மூலத்தில் மூன்று தட்டு தட்டி தூக்கி உதறி விடவும். அதிலிறங்கா விட்டால் குண்டி குத்தியிருத்தி கால் இரண்டும் குத்துக்கால் வைத்துப் பிடித்து, கால் பெருவிரல் கொண்டு பவளத்திலிருந்து மேலேந்தி தடவி எழுப்பி விடவும். மேல் தளம் பூடு கருக்கி சாராயம் விட்டு உலாவி இறுத்துக் [illegible] கொடுக்கவும். சுகம் வரும்.

15. கல்லடைக்_காலம்:- தண்டுக்கதம் கல்லடைக் காலங்கொண்டால் குணம், வித்து மறைந்து கொண்டாலும், நரம்பத்தாலும், புறலுடைந்தாலும், ஆட்டங் கொண்டாலும் பவளத்தில் [illegible] வழியாய் சோரை காணும். இந்தக் குறியிருந்தால் பிழையாது இக்குறியில்லாவிட்டால் வித்துமறைந்ததானால்

இளக்கு:- காலுங்கையும் கூட்டி விருத்தி பிடரியிலிருந்து கால் முட்டு கொண்டு மூணு இழுப்பு இறுத்து விலா இருபக்கமும் அடப்ப காலத்திலிருந்து முன்னும் பின்னும் தடவியிறக்கு. மூலத்தில் 3 தட்டு, உச்சியில 3 தட்டு, காரியில 3 தட்டு வெள்ளைக்குள் 3 தட்டு பிற மேல் கைப்பிச்சையின் நடுவிரல் தட்டு-3 இப்படி தட்டி காலம் கொண்ட தலம் வரை தடவி இறக்கி விடவும். தூக்கி உதறி விடவும். நாழிகை- ~~சயருழி~~. 45½

16. தடிவர்மம்: மேல் திவளை காலத்துக்கு மூவிரல்க்கு அடுக்க வடமிடம். நெஞ்சில் தடிவர்மம் கொண்டால் குணம், ஆள் குன்றிப் போகும் கஞ்சி குடிக்க ஒட்டாது. சுளுக்கி சுளுக்கி குத்தும். வாய் பேச ஒட்டாது. இளக்கு- பிறம்நேர்மை கால் முட்டு கொண்டு கைசேர்த்துப் பிடித்து இருத்தி இளக்கவும். நாழிகை -30.

17. விலவர்மம்:- தடிவர்மத்துக்கு ஒரு விரலுக்கு விலவர்மங் கொண்டால் குணம். ஆள் ஒரு சாய்ந்து விழும். அட்டை சுருண்டாப் போல் சுருளும். நீர்வலமுந் தாலே போம் போதமில்லை கண் மயக்கும். வாயில் கொடுவை வடியும். இளக்கு. மறுபுறம் நேர்மையிற் புறங்கை கொண்டு உள்ளி தட்டி யிளக்கிக் கொள்ளவும். நாழிகை -30.

18. கழுவர்மம்:- தாடிவர்மத்துக்கும் விலவர்மத்துக்கும் அடுத்த [illegible] கழுவர்மம் கழுவர்மம் கொண்டால் குணம், கழுகு யிருந்து நஞ்சினாற்போல் தூங்கும். விழும், கூப்பிட்டால் சத்தங்கேளாது சத்தம் காிகுரல் படும். அன்னம் குடிக்க ஒட்டாது.

இளக்கு: தூக்கியிருத்தி மறுபுறம் முட்டுகொண்டிருத்தி தடவி இளக்கவும். இந்த வர்மமங்கு நாழிகை 90-க்கு சுகம். வாரியநாள்செல்லும்.

19. பள்ளவர்மம்: உச்சி காலத்துக்கு வலமிடம் ஒரு ஒட்டைக்குள் பள்ளவர்மங் கொண்டால் குணம். பலமானால் வலத்தே யிடமானால் இடத்தே சாய்ந்து விழும் வாயாலிரைக்கும் இளக்கம்-மறுபுறம் நேர்மை விலாவில் தட்டி இளக்கவும். நாழிகை-3ம.44

20. நடவர்மம்:- பள்ள வர்மத்துக்கும் நாலுவிரலின் கீழ் நடவர்மங் கொண்டால் குணம், நறுக்கொன்று ஒரு குத்து காத்துப்போல....த்துப்போம். வலசலம் போகாது. இளக்கம்-வல-மானால் இது இடத்தே, யிடமானால் வலத்தே சவட்டி இளக்கிக் கொள்ளவும். நாழிகை-அரு. 85

21. [illegible]
பன்றிவர்மம்:- பள்ள வர்மத்துக்கும், நடவர்மத்துக்கும் இரண்டு விரலருகே பன்றி வர்மங் கொண்டால் குணம்-கவிழ்ந்து விழும், பன்றி-போலே உறுமி அலறி இடக்கும் இளக்கம் - நேர்மை மறுபுறந் தட்டி கைதடவி இளக்கவும். நாழிகை-8.

22. நேருவர்மம்: பன்றிவர்மத்திற்கு ஒரு விரலுக்குக் கீழ் உருளை மூலத்தில் நேரு வர்மங் கொண்டால் ஒரு காலும் ஒரு கையும் நடிக்கும். கண் மூடும். உணர்வு இராது. தட்டினால் தீராது. சோதனை பார்த்து காலுக்கும்கைக்கும் பூட்டு விசை நரம்பு தடவி இளக்கவும். நாளிகை-31.

23. முன்டெல்_வர்மம்: பள்ளம், பன்றி வர்மத்திற்கு இடம், வலம் தொடை அசைவில் பூட்டுக்குள்ளே முன்டெல் வர்மம்கொண்டால் குணம்-மலந்து விழும், கைமடக்கும் பிரேதம் போலாகும் இளக்கம்-மலாந்து படுக்கச் செய்து கால்-தூக்கி உசாத்தி குன்டியயிலிருபக்கமும் கால்கொண்டுதட்டி இளக்கவும். கால் கை விர-லெல்லாம் தாவி இழுத்து தூக்கி உதறி விடவும். நாழிகை-19.

24. அத்திசுருக்கிகாலம்:- பள்ளவர்மத்துக்குக் கீழ் இடம் வரம் சீவிப்பூட்டில் அத்தி சுருக்கி நரம்பற்றால் பிழையாது நரப்பறாவிட்டால் ஆள் முழுமிருக்கும். இதில் முன்குறியிருந்தால் நாழிகை-41ல் கொல்லும். பின் குறிக்கு சுகம் வர மண்டலஞ் செல்லும்.

25. பிடரி_கெள்ளம்:- மேல் கண்ட வர்மத்துக்கு உள்ளடக்கம் பிடரி கெள்ளம், கொண்டால் குணம் - சிரசுமுள்மடங்கி கவிழ்ந்து விழும் கண் மூடும். செவி கேளாது நாழிகை-3-ல், 7-ல் கொல்லும். இதில் வர்ம-வ-இ-க்கு ஒத்ததானால் இளக்கம் - இடம் வலம் நின்று நாடி ஏந்திப் பிடித்து இரு பக்கமும் கழுத்தாடி நரம்பு கூட்டிலிருந்து தடவி யிறக்கி சிரசில்-இ-விதாளம் 1/2 யிளக்கி பாதம்உள்ளில் யிளக்கி பரிசை யில்....த்திக் கொள்ளவும் நாழிகை-35.

26 குவளை:- (திவளை) காலங் கொண்டால் குணம்-விக்கல் கண்சிவந்து கழுத்து கோணிக் கொள்ளும். இளக்கம்-இடமானால் வலத்தைவலமானால் யிடத்தை செவி குத்தியில் கீழ் தடவி யிறக்கி கழுத்தடி நரம்பு சுண்டி முன்னும் பின்னும்உச்சிகாலம் வரை தடிவி யிறக்கி விடவும். கைகண்ட முறை சொல்லக் கூடாது.

add page 20 →

30 பேன்குழி_வர்மம் கொண்டால் வயறு மேலேந்தி நாக்கு தள்ளும். செருக்-குண்டாம். இளக்கு முறை-திவளை காலத்தில கீழிருந்து வயிறு வரை தடவி யிறக்கிக் கொண்டு சேர்த்து ஊசி உதறி விடவும்.

31 சயக்காலம் கொண்டால் குணம்-சய-மாகும்ஒன்றில் கொல்லும் இதற்கு தலை அடக்க காலத்தில் இளக்கிவர்ம சாரியில் சொல்லப்படும் பட நிம்ப எண்ணெய் வைத்து சாப்பிடவும். இரண்டாவது, எள்ளில் இடிக்க இடியக் காரம் இடித்துச சாப்பிடவும். மூன்றாவது-நன்னாரி எண்ணெய் வைத்து முழுகவும்.

32. அண்டவர்மம் கொண்டால் குணம்-வலக்குடல் நிமிர்ந்து பேதி புதமில்லாமல் போகும். நாழிகை-62-ல் வயிறா தும் இளக்கு தூக்கியிருத்தி வலமிடம் குடல் பெரட்டு(புரட்டி) உருட்டிப் பார்த்துத்தட்டி மலந்து படுக்கச் செய்து காலி-ரண்டும்மேலேந்தி பிடித்து இடுப்புரண்டிலும்முககால் நோக்கு தட்டு தட்டவும் வெந்நீர் விடவும்.

33 புதிபுரண_வர்மம் கொண்டால் குணம் நெஞ்சொடுக்கும், மிகுதெறு வயிற்றேற்றும். நீரடைக்கும்நெடுமூச்சுண்டாம்செவியடைக்கும். கால் நீட்டியிருக்கச் செய்து சிரசில் நீர்விட்டு வயிறு தடவி அன்னகாலத்தின் நேர்புறமே புறங்கால் தட்டி சிரசில் இளக்கி தூக்கி உதறி விடவும். மேல்தளை சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, ஓமம் வறுத்துசூரணம் செய்து கொடுக்கவும்.

34. செககாலவர்மம் கொண்டால் ஒரு காலாவது, ஒரு கையாவது அடிக்கும். வலமானால் இடத்தே யிடமானால் வலத்தே நெஞ்சி பூட்டுவிசை நரம்பு தடவி இளக்கி உதறி யிழுத்து விடவும்.

35. ஏகாந்தி_காலம் கொண்டால் குணம்-பித்தனைப்போல் ஓடி திரிவான் உடல் குலுக்கும்நாழிகை-24-க்குள் மயக்கமுண்டாகிப் படுக்கும். இளக்கம்-குடுமி பிடித்து உச்சிக்காலத்தின் நேர் புறங்கால் கொண்டு மூணுமூணு தட்டுத் தட்டி இளக்கவும். காரியிலும் பரிசை யிலும் அமர்த்திக்கொள்ளவும். மேலதளை சுக்கு பலம்-2, கிளக்கள்சர்க்கரை பலம்-2, தேங்காய் தனிப்பால் உரிபொடி யரிசியிலிட்டு கஞ்சி வைத்து உப்பிட்டுக் கொடுக்கவும் சுகம்.

36. ஈத்திறகு_காலம் :- குணம்-நித்திரை வராது இருக்கும், படுக்கும், எழுந்திருக்கும் இளக்கு செய்முறை - பிடரியில் கீழ் முட்டு கொண்டு இருபுறந் தடவி யிறக்கி முடிப்பிடித்து முதுகு நடுச்சுழியில் விள்ளங்கால் தட்டி நெஞ்சில் தடவி இளக்கிக் கொள்ளவும். வெள்ளீர் விட்டு சாமரிசி கஞ்சி வைத்து நெய் மீன் வாங்கி தேங்காய் எண்ணெயில் வெந்து (வேகவைத்து) உப்பிட்டுச் சாப்பிடவும்.

37. ஏகவர்மம் கொண்டால் குணம்-இருபக்கமும் விலாவிரண்டும் மேல் நோக்கி எதிரெடுக்கும். இளக்கம்-மல்லாந்து படுக்கச் செய்து காலும் கையும் இழுத்து விட்டு மேல் சம்பணம் போட்டு கூட்டியிருத்தி மூன்று வர்மம் தட்டி இளக்கி சிரசிலிருந்து வெள்ளீர்விடவும்.

38 வர்மம் மூன்றுக்கும் விபரம், இளக்கு முறை முதலாவது-தூக்கியிருத்திப் பிடித்து, குடுமி பிடித்து பிற்பதிவிலிருந்து பாதம்வரை தடவி கால் தூக்கி மூன்று குலுக்கு குலுக்கி விடவும். இரண்டாவது நாடி பார்த்து, குடுமி பிடித்து காரியிலிருந்து பொய்கண்ணுறியில் தடவி நோகாமல் பாதந்தடவி காலை கீழும் மேலும் பிடித்து மூன்று அசை அசைத்து விடவும். மூன்றாவது செள்ளிக் குத்து, விலா விருபக்கமும் தடவி தடவி ஆவகாலம் இரண்டிலும் தட்டி பரிசையில் மாற்றிக் கொண்டு பின் சுக்கு, கஷாயம் கொடுக்கவும் வெள்ளீர் விடவும். சாமரிசி கொடுக்கவும்.

குழந்தைகளுக்கு குடலேற்றம் கொண்டால் செய்குணம் - பால்குடி-யாது, கொடுவைவடியும், வயறேத்தும், கண் இமைப்புருவம் தழுக்கும் செய்-பாகம்-முன்வயறு தடவி பிறம குறுக்குச் சுழியிலிருந்து கைவிரித்து வைத்து மேல் தட்டி தூக்கிப் பிடித்துக் காலிரண்டும் வெட்டியிழுத்து விடவும். இதில் தீரா விட்டால் மேல் செய்பாகம்-தைவேளை, குப்பமேனியிலை இவை இரண்டும் சிறுதிளி தெட்டி நிம்ப எண்ணெயில் வேகவைத்துப் பின் குறுக்குச் சுழியை ஊன்றி யெடுக்கவும்.

முற்றும்.

40 கன்னிமையில் பூளி வர்மங் கொண்டால் குணம் ஒரு சுற்று சுற்றி விழும். நர்க்கு நீளும், இளக்கு சிரசில் தட்டி நெஞ்சில் தடவி இளக்கினால் தீரும்.

தொடு_வர்மத்தின்_விபரம்.

1. நாளிக்காலம் :- இதின் ஆறுவிரலுக்குக் கீழ் நாடியில் நாளி வர்மங் கொண்டால் கண்ணிரண்டும் மின்னி மின்னி பிடித்திழுக்கும். திரும்பி தடவினால் தீரும்.

கடைக்கண்_பொய்கை_குத்து: பூளி காலத்திலருகே கடைக்கண் பொய்கையில் குத்தினால் பூட்டு விசை விட்டு மண்டைவிட்டு கண் தள்ளும். இளக்கம்- இருபக்கம் விசை பூட்டில் கைகொண்டிருத்தி பிரிசையில் தட்டியமர்த்தி கற்பூரப் புகை மூன்று நாள் ஆறு வேளை நாசியில் பிடிக்கவும்.

3. தாரை எலும்பு விசை நானி காலத்தில் ஓர் ஓட்டையின் கீழ் காரை எலும்பு விசை விட்டால் குணம்-கவிழ்ந்து விழும் இளக்கம்-பிறம நேர்மையில் மேலேந்தி சவட்டில் தீரும்.

4. கைத்தோள் தொடுவர்மம் - காறை விரலடுக்கை தோளில் தொடுவர்மங் கொண்டால் குணம்-கைசோர்ந்து போம். இளக்கம்-தடவினால் தீரும்

5. கைமுட்டில் தொடுவர்மம் - கொண்டால் கை சோர்ந்து ஒன்று மெடுக்க ஒட்டாது.....னாலும் சீலை நனைத்துச் சுற்றினாலும் தீரும்.

6. கைமுட்டிக்குள் தொடுவர்மம் கொண்டால் குணம்-கைதாழ்ந்து போம், கையாடாது இளக்கம்-தடவி விரல் கோர்த்துப் பிடித்து இழுத்துவிடில் தீரும்.

7. அன்ன கஉறிமி கைமுட்டுக்கு முக்கால் சாணுக்குக் கீழ்வர்மங் கொண்டால் குணம்- எலும்பு ரண்டும் முறிந்தால் பிழையாது. ஒரு எலும்பு முறிந்து கைகெட்டி-னால் கை கோணிக் கொள்ளும்.

8 கைபெருவிரல் நடுவி பே கஉறிமி வர்மங் கொண்டால் பிழையாது.

9. மேல்பிசினி பாம்பு விரலடியிலும் மேல்பிசினி தொடுவர்மங் கொண்டால் சுருச்சிபைரம் தடவி இழுத்து விடில் தீரும்.

10 வாதசக்கரவர்மம் நடுக்கையில் வாதச்சக்கரவர்மங் கொண்டால், முறிவு கொண்டாலும், வெட்டுக்குத்துப்பட்டாலும் பிழையாது.

11 பெருநரம்பு வர்மம் வலது கால் தொடையின் கீழ் பெருநரம்பு வர்மம் கொண்டால் கால்வலித்து நிமிர்ந்து நிற்கும். இளக்கு-கால் மடக்கித் தடவி இழுத்துவிட்டால் தீரும்.

12. கால்முட்டு செரட்டைக்குள் தொடுவர்மங் கண்டால் கால் மடக்கிவிழும். தடவி இடம் வலம் தட்டில் தீரும்.

13. கால் சிரட்டை ஆறு விரலுக்குக் கீழ் தொடுவர்மங் கொண்டால் சோர்ந்து விழும். தடவினால் தீரும்.

14. குணுக்கால் வர்மங் கொண்டால், கணவெள்ளி ஓடினால் போலிருக்கும் கவிழ்ந்து விழும் முறிந்து பிறங்கண்டால் பிழையாது- இல்லாவிட்டால் தடவி விரல் இழுத்து விரல் இழுத்து விடத் தீரும்.

15. குதிங்கால் வர்மம் கொண்டால் கால் வீங்கும் பிரண்டு தளப்பெழுகும். வீக்கத்துக்கு பூச்சி மருந்து காசுகட்டி உவர்மண் இளனி கோதும்பைச் சாற்றில் அரைத்துக் கொதித்துப் பூசவும் தீரும்.

16. கால் கண்ணில் தொடுவர்மங் கொண்டால் குத்தும் உளையும்–முன் சொல்லப்பட்ட மருந்து பூச தீரும்.

17. கால்படத்துக்கு உயர்வசவில் கால் கண்ணுக்குக்கீழ் கால்படத்துக்கு உயர் வசவில் பொடுவர்மங் கொண்டால் குணம். பிற முறிவு அத்து நீங்கினால் பிழையாது. முறிவில்லா விட்டால் தடவிப்பார்த்து தளை காசுகட்டி, குக்கில் யாளி யாளியில் சதகுப்பை கட்டி சன்னாறு வெந்தயம், நெல்பொரி, களிப்பாக்கு, புளியமுத்துதோடு சாராயம் விட்டரைத்து முட்டை வெள்ளைக்கருவில் விட்டு மத்திச்சுப் பூசவும்.

18. காலுப்பு குத்திக்கு பிசினி வர்மம். கன் பொட்டத்தால் விழையாது மூனு ஐந்தில் மரணம்.

19. அதின் மூஹரல் கீழ் பிசனி வர்மம் கால் படத்தின் நடுவில் பிசினி வர்மம் குணம். கால் தரிக்கும் ஓழு இமுத்துத் தடவினால் தீரும்.

20. அதின் மூவிரல் கீழ்பிசினிவர்மம் குத்து பட்டாலும்பிழையாது.

21. கால் பெருவிரலில் குத்துக்கு யா தொடுவர்மங் கொண்டால் கால் சுருக்கிப் பிடித்தும் பிடிக்கும். தடவ இமுத்து விடில் தீரும்.

22. கால் சிறுவிரல், பெருவிரல் அடுத்த நடுத்த நடுவிரலில் பிசினி வர்மங் கொண்டால் நடக்க வொட்டாது. தடவினால் தீரும்.

23. கால்சிறுவிரல் பிசினி வர்மம்கொண்டால் கால் வீங்கும் நடக்கவொட்டாது . என்னெய் போட்டுத் தடவினால் தீரும்.

"உடல்குறி அறிதல்"

மரண கட்டி ஔஷத படலம்

காப்பு

ஆயிரு வேத முன்னோர்
அறிவுடன் எழுதி வைத்த
நோயல்ல முறிவு தன்னை
நொய்துடன் பார்க்க வென்று
வாய்மையாய் தெரிந்து யானும்
மருந்துள்ள மற்றோ டென்னை
தூய்மையாய் தெரிந்து யானும்
சுகம்வர உரைத்துச் சொன்னோம்.

பண்டிதனே வர்மத்து அறிய வென்றில்

பண்டிதனே வர்மமுனு அறிய வென்றில்
　　பார்த்திடுவாய் குருநாடி கைநாடி தேர்ந்து
கண்டிதமாய் நாடியுனு காலந் தப்பில்
　　கலந்து ஒரு நாடியிரு கையில் வீசில்
பண்டிதனே வர்மமென்று அறிந்து நீயும்
　　பார்த்திடுவாய் தெளிவறிந்து பரத்தைப்போற்றி
கண்டிதமாய் செய்முறையாய் கைசெய் வாயே. — 1.

இறுதி வரியில் நான்கு சீர்களே உள்ளன
மீதம் நான்கு சீர்கள் ஏட்டில் காணப்படவில்லை விடுபட்டுள்ளன.

கேளப்பா வாதவர்மம் அறுபத்து நான்கு
　　கெடிதான பித்தவர்மம் இருபத்து ஆறு
திறமான சிலேற்பனந்தான் ஆற தாகும்
　　[illegible]
நாளப்பா வாதவர்மம் நயந்து செய்வாய்
　　நடுவான பித்தவர்மம் மய்யமே யில்லை
மாளப்பா சிலேற்பனந்தான் உண்டாலே நீயும்
　　வளமாக எண்ணாதே மானம் பாரே. — 2

தலையில் கணக்க முறிந்து நின்றால்
　　சாதிப் பிரண்டை ஈர வுள்ளி
அலையில் கிடக்கும் நீர்முள்ளி
　　அமுர்த வள்ளி இதி வெல்லாம்
உலைய யிடித்து என்னெய் தனில்
　　உலவி காச்சி சிவந்த பின்பு
தலையில் கணக்க கிளியு தனைக்கு
　　கவுத்தியென்னெய் யிடேன். — 3.

அரைக்குமேல் கழுத்தின் கீழ் (மே)
　　அங்கங்கே முறிந்து தானால்
உரைக்கிறேன் கணக்க் கொண்டு
　　உத்த வர்மத்தி னாலே
இடப்புட வேபூ மூன்றும்
　　வேகமும் கடந்து தானால்
நயவுடன் வகுத்திப் பாரே. — 4
தரிப்புடனே என்றனை வைத்து

மார்பினில் ஈரல் வரை
    குடல் மண்ணை நாக்கில்
சீறுபெரு நெற்றி கொண்ட
    சுழிமுனை முலையின் சுற்றி
வீர்பெறு குண்டு குத்து
    எய்திடுஞ் சரங்கள் பட்டால்
சர்வம் தின்ன மேல்தான்)
    தாரணி யறியச் சொன்னோம். 5

மருவயிற்றிலே முறிவுண் டாகி
    வரைகுடல் பிறந்தே யானால்
சிரத்தினில் விளங்கும் பீங்கான்
    திறமுடன் வைத்து ---
மிகுத்ததோர் ஏழும் மூன்றும்
    வேகமுங் கடந்த தானால்
வகுத்ததோர் எண்ணெய் வைத்து
    வருத்திநீ வடியப் பாரே. 6

முட்டுக்கு மேலே யானால்
    முறிவினைக் கழுவி நன்றாய்
வட்டமாம் அத்தி தன்னை
    வருந்தியே பறித்து வந்து
திட்டமாய் குலையை --
    திறமுடன் அரைத் தரைத்து
கட்டிடப் பொருந்தி யாரும்
    காமனை எரித்தோ னாணை 7

முட்டின்கீழ் மண்ணை நாக்கில்
    முறிந்ததே யானா லிந்த
வெட்டினால் அழைப்ப தல்லால்
    விதியிதுப் படியே என்ன
கட்டியே கரண்டை சுற்றி
    கனத்தவே முறிந்து தானால்
திட்டமாய் முன்னிலை யரைத்துத்
    திறமுடன் (~~வகுத்திக்~~) கட்டே. அரைத்துக் 8

வெட்டு பட்ட டிலம் புல்த-லக்கு
  விரும்பி முன்னோர் உரைத்தபடி
வட்டப்படவே தேசிக்காய்
  வகுந்த பாதி ரெண்டாக்கி
சட்டிதனிலே என்னை விட்டு
  தமல மறவே மிகக்காச்சி
அட்டை - மருக ஒத்தி - நீயும்
  அதக்குப் பின்னே என்னையிடே. — 9

இடவே என்னையத் இலந்தை
  தடரி முட்புலாய்
படரும் நிலத்தில் குமிழ் வேரும்
  பருளை ஆவாரை பரு-வேரும்
கடந்த மூலிமுறி பொடுத்தி
  காம்பைச் சூரி நாயுருவி
அடைந்தே இலைகள் தான் (தானே)
  அருளக் கேகு மேல்சரக்கை. — 10

கோட்டம் மருரும் வேம்பாடை
  கொடியும் சிலந்த செவ்வள்ளி
இடங்கரிய ஒத்தி ரிக்கம்
  இலைசோம்பு சந குப்பை
கேட்டில் வளரும் நீர்முள்ளி

33-வது ஏடு காணப்படவில்லை.
--- --- --- ளானே.
கருதி செய்வீர் கற்றோரே. — 17.

தல்லிபட புன்னை வைத்து
  சலித்து கிடக்க வேண்டாங்கான்
எல்லா நரம்பும் தான்னுறும்
  குலவப் பட்டை உத்தி அவத்தி
சொல்லும் மஞ்சள் தான் சேர்த்து
  சுகமாய் சரிசமன் கூட்டி
வெல்லும் குமரிசார் வார்த்தரைத்து
  வீக்கம் தன்னில் தால்பூசே. — 18

பூசுகில் வீக்கம் தானும்
  பொருந்திடும் புன்கள் தானும்
வாசியா,ம் வலியும் குத்தும்
  வந்ததோர் வெதுப்பும் தீரும்
பேசிய மருந்து மூன்று
  பொழுதனில் போகக் கண்டால்
தேசிகா மருந்து வைக்க
  தெளிந்துநாம் மருந்து சொல்வோம் — 19

சொல்வோம் என்னெய் நாரி
  தங்கமாம் புங்கம் பாலும்
சொல்லும்தல் மருந்து சீந்தி
  வீரானி கீழ்காய் நெல்லி
வல்லவே ஆடு தீண்டான்
  வேரைமேனி வேம்பாடை யோடு
மெல்ல அபின் பூரம் சேர்த்து
  மெழுபதம் வடித்துக் கொள்ளே. — 20

கொள்ளேநீ இத்தயிலம் மேலில் போத்த
  குணமாகும்விபரந்தன்னை கூறக் கேளாய்
மெள்ள அங்கே உள்ளெழும்புஞ்சீவி புன்கள்
  வீக்கமொடு சதைநேர் அரத்தம் கெட்டு
தெள்ளே இடுப்புவலி குறுத்துக்கு நோவு
  திறமான உளச்சலோடு மூட்டு வாதம்
கொள்ளேநீ விசைநரம்பில் எழுந்த சூலை
  குடிபோகும் யித்தஎன்னெய் குணங்கண் டாயே.— 21

நொந்தபுன் அழல்கள் தீர
  நொங்கினுள் சதையி னோடு
வந்தரா மிச்சம் இருவேலி
  மதுரம் கீழ்க்காய் நெல்லி
சந்தனம் பொன்னாங் காணி
  சரக்கும் ஏலம் தானும்
சந்த மறவே சொன்னேன்
  முலைப்பா லரைத்துப் பூசே. — 22

ஒத்திலிட மருந்து கேளாய்
  ஓங்கார கனபதிமூலிவகை
சித்தமுடன் ஜாதியோடு ஊர்முதலி
  திறமான வெள்ளறகு நல்பிரண்டை
உத்தமனே இவ்வைந்தும் பாதி
  ஓங்கியதோர் வொங்காயம் பூடுபாதி
பத்திரமாய் யிடித்ததனை எண்ணெய்தன்னில்
  பண்பாக வேகவைத்து ஒத்திவாயே. — 23

னானா நானொன் திரம்புசிக்கி யிருக்கல் கொண்டு ரு
  தயவான தேகமது வில்போல் கூனில்
மானா வசைவதுதான் தீர்ப்ப தற்கு
  வளமான நல்லெண்ணெய் படிதா னொன்று
இய தேனான திரண்டை படிதா னொன்று
  சிறப்பான மத்தல்சாறு படிதா னொன்று
கிறம்பு
குணமாக குமரிசாறு படிதா னொன்று
  ---- இவைநாலும் கூட்டிக் கொள்ளே. — 24

கொள்ளேநீ நானாங் கள்ளிச்-சாறு நாழி
  குணமாக அந்தயிலை கொண்டு வந்து
கேளேநீ பான்டத்தில் காடி யிட்டு
  சிறப்பாக வண்டுகடி இலைப ரத்தி
மெள்ளநீ அதைமூடி அவித்தி றக்கி
  வென்பட்டு யிடித்தநீ சாறு சேர்த்து 6
கொள்ளநீ மருந்துஐந்தும் ஒன்றாய்ச் சேர்த்து
  கூர்ந்து பருவத்தில் இறக்கிப் போத்தே. — 9 25

நன்னாத உணர்வில்லா திமிர்தான் தீர
  நல்நீர் நெருப்பு சாறு உழக்கு
7 மன்னான ஊர்மூலி --- ---
  வளமான ஆவின்பூரம் கஞ்சா எவச்சாறும்
குன்னாத வெள்ளருகுச் சாறு உழக்கு
  கொடிதான சிறுதும்பைச் சாறு உழக்கு
நன்றான கடுகு கொடுவேலி வகைசரியாய்
  நலமான தேங்கெண்ணையில் காய்த்தப் பொத்தே. — 26

சூலையொன்று சொல்வார்கள் அறியா மூடர்
　சுத்தியதோர் விசைநரம்பு சுளுக்கு கோவில்
கால்நடக்க ஒண்ணாது கீழ்மேல் வாங்கும்
　கடினமாய் ரத்தமது கட்டி விம்மும்
வேலைவிடார் நான்பூட்டும் வில்போ லாகும்
　விதமுற்று குத்துஉளையும் குடோரம் செய்யும்
விதி
கோணு கிறி தட்டழிவார் குறுக்கிக் கொள்ளும்
　கூறுகிறேன் விசைரம்பின் குற்றந் தானே. — 27

சூட்சமதாம் தைலமொன்று சொல்லக் கேளாய்
　சுருக்காக ஆசானுக்கு சுளுக்காய்ச் சொன்னேன்
ஆச்சரியம் நீர்நெருப்பு நீலி யப்பனே
　அப்பனே ஊர்முதலி வெள்ளருகு அத்தி
வச்சநல்ல செறுதும்பை கௌதும்பை யோடு
　மகத்தான பல்றிகிழங்கு வெற்றிலையும் ரண்டும்
தீர்ச்சையப்பரு சித்திரமூலம்கார்த்திகைக் கிழங்கு
　சிறப்பாக கடைமருந்து செப்பக் கேளு. — 28

கேளப்பா கடுகுரத்தம் லிங்கம் பூடு
　சிதான வெங்காயம் மனோசிலை பூத்த
நாளப்பா துருசு சுக்கு குந்திரிக்கம்
　நலமான காசுக்கட்டி கஸ்தூ ரி மஞ்சள்
வாளப்பா பொன்வறு தாரம் சாம்பிராணி
　வகையான சூடம்கெந்தம் ரெட்டி வாங்கே
ஆளப்பா சவ்வீரம் சங்குமுடி தாரம்
　அப்பனே அஞ்சனக்கல்நவச்சாரம் வாங்கே. — 29

வாங்கியதோர் மருந்துதனை மூலியோடு
　வளமாக இடித்ததனை கிளாயாய் கூட்டி
தாங்கியதோர் என்னெய்விட்டு தழலெரிக்க
　தைலமது இறங்கும்பார் ரச மில்லை
ஓங்கியதோர் தைலமதை பீங்கானில் போட்டு
　ஒருவருக்கும் சொல்லாதே [illegible] உண்மை யப்பா
ஆங்காரம் வெகுசுருக்கு இத்தைலம் அப்பனே
　அப்பனே இத்தைலம் அடவாய்த் தானே. — 30

நலமான கடுகுடனே சுக்கு மஞ்சள்
நல்காயம் கருநாவி கெவுரி வெள்ளை
குலமான லிங்கமோடு சவ்வீரஞ் சேரே
குன்றாதநவச்சாரம் மாச மூப்பன்
நலமான வசம்பு பூரஞ்சாம்பிராணி
நல்குருசு காசுகட்டி சித்திர மூலம்
குலமான வெங்காயம் பூம பாதி
கொடியிலுப்பை விதைசெங்கொட்டை வாளம் வாங்கே. - 31

வாங்கியதோர் மந்திரத்தில் மருந்த தனை
வளமாக அரைத்துநீ திரியி லூட்டி
தாங்கியதோர் விட்டு தழலெ ரிக்க
தைலமது இறங்கும்பார் சரக்குச் சொல்ல
ஓங்கியதோர் தைலமதை பீங்கானில் பூட்டு
ஒருவருக்கும் சொல்லாதே உண்மை யாக
ஆங்காரம் வெகுசுருக்கு இத்தைலம் ----
ஆச்சரிய மாச்சரிய மடக்கிக் கொள்ளே. - 32

கொள்ளேநீ இத்தைலம் காயத்தில் பொத்தே
கூசாதே உள்ளங்கால் விரலில் சேர
மொள்ளேநீ கொண்டை யோடுசிரசும்
பித்தநொரு வர்மத்தைலம் அதனில் பொத்தே
தெள்ளே-அவ் வீக்கமொடு ரத்தம் கட்டு
திறமான கபசுரங்கள் திசை கட்டோம்
மெள்ளவங்கே சல்லியது நாடா தப்பா
மீறினால் காலன்வந்தால் விலகிப் போமே. - 33

வர்மத்தில் நீரிறிவு வந்து தானால்
வாகாக ஔஉதங்கள் சொல்லக் கேளாய்
தர்மத்தை நிவர்த்திசெய்ய பாளை போற்றி
கன்மிதடாய் வர்மமது இளக்கச் செய்து
வர்மமது கைசெய்து இளக்கி பின்னே
மருந்துகல்நார் ஆவின்பாலில் வகையாய்ச் செய்து
வேறு மனமில்லாமல் மைந்தா நீயும்
மறக்காம லிம்முறையை மகிழ்ந்தது செய்வாய். 34

சங்குமுடி நாரம் மஞ்சள் மெழுகு
சதிரின் அஞ்சனைக்கல் பவளப் புத்து
பொங்குங் கருஞ்சீரகம் கார்கோ லரிசி
புழ்பெறவே வகைவகைக்கு நாற்பத்து இரண்டு
சங்கைபெறு வேம்பான கழஞ்சு எட்டு
தயவான புங்கம்பால் அரைப்படி சேர்
வங்கமிடு இசங்கன்வேர் பாலரைப் படிசேர்
வாகன ஈசன்மூலி சாறுபடி-கால் சேரே. - 35

சேரப்பா முறைப்படி சாறு படிகால
சிறப்பான என்னெயது படிதா னொன்று
வாரப்பா இவையெல்லாம் பாண்டத் திட்டு
வாங்கி எரிபருவ காத்துக் கொள்ளே
நீரப்யா வைத்த பனிகள் புரைப்பிலும்
நிசமப்பா விட்டடைக்க நிவர்த்தி யாகும்
பாரப்பா இம்முறையை பகர்ந்தி டாதே
பரமகுரு திருவருளால் பாடி னேனே. - 36

கேளப்பா சாதி லிங்கம் பவளம்
கெடிதான ரத்தம் வேம்பாடை யோடு
நாளப்பா அருசு கார்கோலரிசி
நலமால கருத்த சீரகமும் கூட்டே
வாளப்பா புகையிலை யென்று கூட்டி
வளமான சாராய மிட்டரைத்து
நாளப்பா சமவல சாறு விட்டு
நலமாக தேங்காஎன்னெயில் காய்த்து உட்டே. - 37

அருசு ரத்தம் வேம்பாடை யோடு
சொல்லரிய சார்கோ லரிசி தானும்
வரிசைபெறு கறுத்த சீரகத்தி னோடு
வந்ததமருந் தாறதுவும் வகைக்குக் கழஞ்சரும்
பருதிநிற மான வெள்ளகுந் திரிக்கம்
பன்பாக இருகளஞ்சி வாங்கிச் சேர்த்து
அரிதான பூவரசன் பட்டை சாற்றில்
அரைத்து யேரென்னெய் படிகாலில் காச்சே. - 38

காச்சேநீ பூத்திறக்கி வைத்துக் கொண்டு
கலமான புன்புரைகள் வீச்ச முற்று
வீசுகின்ற வியாதிக்கெல்லாம் விட்ட டைந்தல்
வச்சிர முற்ற மேனி யாகும்
ஆச்சரிய மிந்த என்னைக் கொப்பாக
அவனிதனில் இல்லையடா சொன்னோம்
வாச்சுதெங்ய விருதுசொல்லி செய்வா யப்பா
வகுப்பான தவரென்னைய் வைப்பாயே - 39

உறப்பாக மண்டையி லடிபட்டநோவுதீர
உண்மையாய் சொல்லுகிறேன் மருந்தைக் கேளாய்
அறப்பான கடுகுரோகிணி முருங்கப்பட்டை
வாகான வெற்றிலையும் வளமாய்க் கூட்டு
சிறப்பான எருக்கலஞ் சாறுவிட் டரைத்து
சிரசுதனில் பூசி வெந்நீர் திறமாய் வாரே. - 40

நலமான லிங்கமுடி மஞ்சளை மெழுகு
நல்துருசு ரத்தமொடு யகள்பது அஞ்சனக்கல்
கோலரிசு கூறிலேன் கருஞ்சீரகம் மதுரம்வாளம்

நலமான வேம்பாடை மரிவெள்ளை யப்பா
நல்பூடு வசம்பினோடு வெப்பா லரிசி
குலமான கற்பூரம் பாதி யப்பா
கூறினேன் சிவதைவிரைப் பிசினுங் கூட்டே. - 41

(இரண்டாவ வரியில் 4 சீர்கள் மட்டுமே உள்ளன.)

கூட்டப்பா நன்னாரிவேர் குமுந்தட்டி வேர்
கொடிதான சாற்றின்வகை கூறக் கேளாய்
நாட்டப்பா பூவரசன் பட்டை -- --
நலமான வாளமோடு வெங்காய மேனி
கூட்டப்பா துளசிதீண்டாள் ஈசன் மூலி
கூறினேன் வகையது புங்கல் பால்கால்
ஆட்டப்பா வீராணி சாறு மூக்கு
அப்பனே ஊச்சிசதை நாழி சேரே. - 42

சேரநீ யிசங்கள்வேர் தைல மொன்று
திறமான ஆலம்பாலொன்று எண்ணெயொன்று
பாரப்பா கடைமருந்து சரியாய் வாங்கி
பண்பாக அரைத்ததனைத் தூளாய் செய்து
வாளப்பா எண்ணெய்எரி பருவம் காய்ந்து
வளமான பீங்கானி லடைத்து ________
சேரப்பா முறிவுசரி சமனாய்க் கட்டி
சிறப்பாக எண்ணெயிடு ஊறும் பாரே. 43

கூறுவோம் ஆலம்பால் படிதா னொன்று
குறுந்தட்டி நல்காரி வேப்பா லரிசி
தேறவே சிவதைவிரை பிசினும்வேம் பாடை
தேர்த்திடுவாய் ஊச்சிசதை படிஒன் றப்பா
ஆறவே எண்ணெயசிபடிஒன் றிட்டு
அடைவாய் காய்ந்திறக்கி வைத்துக் கொண்டு
பேறு பெறுமுறி சரிசமனாய்க் கெட்டி
பிள்ளித்த எண்ணெயிடு உண்ணும் பாரே. - 44

தீராத முடந்தீர மருந்து

தீராத முடந்தீர புச்சொல்லு கேளாய்
செப்பிலேன் முசலெலும்பும் அதில் விட்டமும்
பேதர நீர்முள்ளி புத்துச் சோறு
பெருங்காயம் இந்துப்பு வசம்பு சுக்கு
கேதை மிளகு கெடுவேரி சேர்த்து
கும்பிலேன் ஓட்டு நீர்விட் டரைத்து
ஓரிது பெருவாயம் பாலில்வெந்து பூச
உள்சூலை வாதமது கேட்டுப் போமே. - 45

வர்மந்தான் நெடுநா ளானால்
தேகமது கறுத்துக் குன்றும்
கெறமான தாசு மோகம்
கெட்டிடும் வலம்நீர் கேடாம்
கிரமமாய் ஊண்செல் லாது
கெடுதியாய் கஉ சயம்-எக்கிக் கொல்லும்
வர்மமது இளக்குமுன் எண்ணெய் வைத்து
வாரத்தால் இளகும்பின் வருந்திச் செய்யே. - 46

செய்யப்பா சயமிருதாள் இளகிக் கொண்டால்
திறமான என்ணெய் சொல்லக் கேளாய்
மெய்யப்பா நிம்பெண்ணை படிதா னொன்று
நேரான மருந்தினை மந்திரந்தாள் ரெட்டிகூட்டே
வெண்டுக்காய் அரத்தை சுக்கு திப்பிலி
ஈரான அக்கிராவும் வில்வகை களஞ்சி 2
நய்யவே ஞ ளாக்கி ரெண்டும் சேர்த்து
நலமாக காயத்திலும் கற்பூண்டு கொள்ளே. - 47

கேளப்பா காரைஎள் படிதா னொன்று
கொடிவேரி கடுகுகோட்டம் சுக்கு திப்பிலி
கேளப்பா வகைக்குவகை களஞ்சு ரண்டு
சேர்த்திடுவாய் பனைவெல்லம் பலந்தா னொன்று
கேளப்பா யிடித்து உண்டைபிடித்துச் சேர்த்து
கூசாமல் சாப்பிடுவாய் இருகடிகை நேரம்
மெள்ளவங்கே தேகமது ரகைஉஷ யாகும்
வீணான நன்னாரி வாரே --- - 48

நன்றாக வர்மசன்னி முட்டு கொண்டால்
நலமான ஒத்தலொன்று சொல்லக் கேளாய்
நன்றான கற்பூரம் காசுக் கூட்டி
நமச்சாரம் அநுதாரம் குமிந்தா னப்பா
நன்றாக யிம்மருந்து ஐந்தும் கூட்டி
நல்மூலி தைவேளை மூலி-யோடு குப்பைமேனி
நன்றாக சேர்த்திடித்து நிம்ப என்ணெயில்
நலமாகவே சுவைத்து ஒத்து வாயயே. - 49

கூட்டப்பா புகையொன்று சொல்லக் கேளாய்
உறப்பான நமச்சாரம் காசுக் கூட்டி
நாட்டப்பா அநுதாரம் குமிந்தான் பூரம்
நன்றாக யிவையரைத்துத் திரியி ஊ ட்டி
சீட்டப்பா நெருப்பிட்டுப் புகையைப் பூட்டே
முறைசெய்து வந்துவிடும் பின்செய் பாகம்
நாட்டப்பா சுக்கிட்ட வெந்நீர் கொள்ள
நலமானால் சாமரிசிக் கஞ்சி கொள்ளே. - 50

நல்னாரி நட்டிகோட்டம் மதுரம் ஏலம்
  நற்சீரகம் கிரம்புடனே சிவதை தேற்றால்
கல்நார் சித்திரபேதி சந்தன முந்தாள்
  எடிதான வெட்டி இருவே லிரமிச்சி ௨7
பொன்னாங்காணி கீழ்நெல்லி மேனிச் சாறு
  புகழான தொங்குதேங்கா என்னை யப்பா
மன்னான்நீ காயத்திற்கு வைத்துக் கொண்டு
  மதியான ஆள்திற மறிந்து செய்யே. - 51

காலில் பெருவிரலின் மேல்
  கெள்ளியில் முறிவு கொண்டால்
காலும்நீ அஞ்ச வேண்டாம்
  சூத்திரக் குறிகள் காட்டி
நாலிலும் அஞ்சுக் குள்ளாய்
  நரம்பு விம்மிக் கொள்ளும்
காலனும் வந்துவிட்டான்
  கடுகென மரணம் பாரே. - 52

கைவிரல் கெள்ளி தன்னில்
  கனக்கவே முறிந்து தானால்
வையக மதனில் மூலி
  மருந்துக்குள் தீரா தப்பா
மைவிழி மறவா வண்ணம்
  மலரடி வணங்கிச் சென்று
பையவே மூனும் ஏழும்
  மேதினியில் கடந்தால் செய்யே. - 53

வில்லைவேர் அஞ்சனவேர் குறுந்தொட்டி வேர்
  மேவியதோர் அமுதவள்ளி செஞ்சட்டி வேரும்
நல்ல சித்த மன்னின் வேரும்
  நரங்களே வகைசரியாம் தரித்துப் போட்டு
செல்லவே கடைமருந்து திரிகடுகு
  சுகமான திரிவலை கழஞ்சு ரண்டு
மெல்லவே யிடித்ததனை கூடப் போட்டு
  வேகவைப்பாய் முத்குறுணி நீரில் தானே - 54

[illegible]

தானான கழாயமது நானாழி யாக்கி
   தப்பாமல் வடிகொண்டு சாற்றக் கேளே
ஈனமுடன் முட்டையிடும் பருவ முள்ள
   இளங்கோழி குடல்கால் தள்ளிப் போட்டு
ஆனகளா ..... பிறந்து போட்டு
   அடுப்பேற்றி உழக்காக்கி இருநேரந்தான் கொள்ளே - 55

<u>குடிக்கவே மூன்றுநாள் குணமாகும் வியாதிதனை கூறக் கேளாம்</u>

கேளப்பா நரம்புப்பிடி இடுப்புக் குத்து
   கெடிதான ஆயாசம் மயக்கம் விக்கல்
தேளப்பா அடங்கிநின்ற வலம்ச லத்தான்
   தேகமொடு வரட்சை எரிவு காந்தறல்
நாளப்பா குலை வான தாது மெலிகும் மோகம்
   நரம்போடு ஒரத்தகட்டு உலைச்சலே தீரும்
வாளப்பா இம்முறையை மகிழ்ந்து செய்வாய்
   மகாமேரு சிருபையினால் மாறிப்போகும். - 56

நாள்சென்ற வர்மம் இளக்க எண்ணெய்

வேப்பெண்ணெய் படி-1. பசுவின் பால் படி-1
செந்தெங்கிளநீர் படி-1, காஞ்சிரம் பழம் -25
ஆக மருந்து நாலும் ஒன்றாய்ச் சேர்த்து காய்ந்தப் பருவத்தி
லிறக்கி வர்மத்தில் அதாவது வர்மங்கொண்ட தலத்தே
தேய்த்து வைக்கவும். நாள்சென்ற வர்மம் குணமாகும்.

முற்றும்.
